**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.**
**(தேனி மாவட்டம், வீரபாண்டி காவல் நிலையக் குற்ற எண். 319/2025)**
**R.C.S. No. 189/2026.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திருமதி. ராஜேஸ்வரி | ஜாதி | |
| கணவர் பெயர் | முருகேசன். | தொழில் | கூலி வேலை. |
| கிராமம் | வயல்பட்டி. | சமயம் | |
| தாலுக்கா மற்றும் மாவட்டம் | | வயது | 35/2026. |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.07.2026.

**வாக்குமூலம்:–**

நான் தற்போது, வயல்பட்டியில் குடியிருந்துகொண்டு, கூலி வேலை செய்து வருகிறேன். கடந்த 30.09.2025 ஆம் தேதியன்று என் கணவர் முருகேசன் அதிகமாக வயிறு வலிப்பதாகக் கூறியிருந்தார். மருத்துவமனைக்குச் செல்லலாம் எனக் கூறியபோது, மதுகுடித்த வாடை வந்ததால் குளித்து வருமாறு எனக் கூறினோம். அவர் குளிக்கச் சென்றவர் வீட்டிற்கு வரவில்லை. அவரை தேடிச் சென்றபோது, வயல்பட்டி சுடுகாட்டில் மயக்க நிலையில் இருந்தார். அவரை தேனி, க.விலக்கு அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். வயிற்று வலி தாங்காமல் ஏதோ விஷம் அருந்தியுள்ளார். என் கணவரின் இறப்பில் எனக்கு எந்தவித சந்தேகமும் இல்லை. நான் கொடுத்த புகாரின் அடிப்படையில் விசாரணை மேற்கொண்ட புலன் விசாரணை அதிகாரி இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார். அவர் தாக்கல் செய்துள்ள இறுதி அறிக்கைக்கு எனக்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை. எனது ஆதார் அடையாள அட்டையின் நகலையும் சமர்ப்பிக்கிறேன்.

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு, என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.**

BHARATHA DEVI

Digitally signed by BHARATHA DEVI
Date: 2026.07.10 18:05:53 +0530

**நீதித்துறை நடுவர்,**
**தேனி.**